[1978 ஆகஸ்ட் 31

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—(அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் ஆய்வில் உள்ளது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைவாக செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு மதிப்பீட்டை விரைவுபடுத்த வேண்டும் என்று வாரியத்திற்கு கூறப்பட்டுள்ளது. அநேகமாக 1978 டிசம்பர் மாதத்திற்குள் இந்தத் திட்ட அறிக்கை முடிக்கப்பெறும் என்று நம்புகிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. சுமார் 15 கோடி ரூபாய் அளவில் இருக்கும்.

பசுமலை மின்வாரிய கிடங்கில் உள்ள செப்பு கண்டக்டர்கள்.

*வினு 2.—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை பசுமலையிலுள்ள மின்வாரிய ஸ்டோரில் செப்பு கண்டக்டர்கள் உபயோகப்படுத்தப்படாமல் இருப்பில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அவை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) உபயோகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட செப்பு மின் கடத்திகள் இருப்பில் உள்ளன.

(ஆ) 28-7-1978 தேதி நிலவரப்படி 52.3 மெட்ரிக் டன்கள்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, 14—3—78 வரை அங்கே இருப்பில் இருக்கக்கூடிய ''காப்பர் வயர்'' பத்து லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் அளவுக்கு இருப்பு இருக்கிறது. அது இதுவரையிலும் உபயோகப்படுத்தப்படவில்லை. இன்னும் அதே ஸ்டோரில் மூன்று டிரான்ஸ்பார்மர்கள் ரிப்பேரில் இருக்கின்றன. ஒவ்வொரு டிரான்ஸ்பார்மரிலும் இரண்டரை

1978 ஆகஸ்ட் 31]

டன் காப்பர் வயர் இருக்கிறது. இதையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் சுமார் 10 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய்க்கு மின் சார வாரியத்தின் பணம் முடங்கிக் கிடக்கிறது. இதை உடனடியாக செலவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? பல இடங்களிலும் காப்பர் வயர் இல்லை என்ற காரணத்திற்காக மின்சார இணைப்புக் கொடுப்பதில்லை என்ற புகாரும் இருந்து கொண்டு இருக்கிறது. அதே நேரத்தில் மின்சார வாரியத்தின் பணம் லட்சக்கணக்கான அளவில் ஒரே இடத்தில் தேங்கிக் கிடக்கிறது. ஆகவே இதை ரிலீவ் செய்வதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினாக்களில் இரண்டு பிரச்னைகள் அடங்கியிருக்கின்றன. ஒன்று, செப்புக் கம்பிகளைப் பயன்படுத்தலாமா என்பது. இப்போது நடைமுறையில் செப்புக் கம்பிகளைப் பயன்படுத்தி மின்சாரத் தொடர்பு கொடுப்பது நிறுத்தப்பட்டு விட்டது. செப்புக் கம்பிகளை வழங்குவதை இப்போது நாம் நிறுத்திவிட்டோம். உண்மையைச் சொல்லப் போனால் இப்போதுள்ள மின்சாரக் கம்பங்களிலுள்ள செப்புக் கம்பிகளை எடுத்து அவற்றை ஸ்டோரில் வைத்து, ஆக்ஷன் போட்டு வெளியில் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இரண்டாவதாக, நிறைய ஸ்டாக்குகளைத் தேக்கி வைத்திருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இவற்றை நாம் டெண்டர்கள் வரவழைத்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். 17—7—1978-ல் 20 டன்னைக் கொடுத்து விட்டோம். மேலும் 25 டன்னை இந்த மாதம் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செப்புக் கம்பிகளை பகிரங்கமாக ஏலம் போட்டு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? சமயநல்லூரில் நடைபெற்றதைப் போல் நடைபெறாமல் அரசு தன்னை இதில் பாதுகாத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பகிரங்கமான முறையில் ஏலம் விடப்படுகிறது. பத்திரிகைகளில் எல்லாம் விளம்பரம் செய்து விடப்படுகிறது. அப்படிப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் யார் வேண்டுமானாலும் அவற்றைப் பயன்படுத்தி டெண்டர்கள் போட்டுக் கொள்ளலாம். சமயநல்லூரைப் போன்று நடந்து விடாமல் இருக்க வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை உண்டு.

திரு. சி. கோவிந்தராசன்: பழுதடைந்த டிரான்ஸ்பார் மர்கள் ஒன்று 11 ஆண்டுகளாகவும், இன்னொன்று 7 ஆண்டுகளாகவும் அந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒவ்வொரு டிரான்ஸ்பார்மரிலும் இரண்டரை டன் எடையுள்ள

காப்பர் இருக்கிறது. இவற்றை இவ்வளவு நாட்கள் எதற்காக காத்து வைத்துக் கொண்டிருக்க வேண்டும்? அரசிலிருந்து உடனடியாக இதை விற்பனை செய்யக் கூடாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: டிரான்ஸ்பார்மர்கள் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. செப்பு கன்டன்ஸர்கள் அதாவது கடத்திகள் பற்றிய விவரம் தான் கேள்வி, அதற்கான பதிலும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றபடி இருக்கின்ற டிரான்ஸ்பார்மர்கள் 'ஸிக்'காக இருக்கிறதா அல்லது பயன்படுத்தப்பட்டு வருகிறதா என்கின்ற விவரங்களை ஆராய்ந்து தான் முடிவு எடுக்க வேண்டும்.

நிலவள வங்கிகள்.

*வினா 3.—திரு. கே. சௌந்தரராசன்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்: கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செந்துறை, ஆண்டிமடம், அரியலூர் ஆகிய இடங்களில் தனித் தனியே மூன்று நிலவள வங்கிகள் அமைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இல்லை.

திரு. கே. சௌந்தரராசன்: தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் உடையார்பாளையம் ஒன்றியம் ஒன்றாக இருந்த நேரத்தில் நான்கு ஒன்றியங்களைச் சேர்த்து ஒரே இடத்தில் நிலவள வங்கி அமைக்கப்பட்டு இருந்தது. இப்போது ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தனித் தனியாக ஏற்பட்டிருப்பதால், அந்தந்த ஒன்றிய வங்கியில் தான் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதே நேரத்தில் முன்பு இருந்த வங்கியில் ஏதாவது தவணைக் கடன் பாக்கியிருந்தால் இப்போது கடன் பெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நிலவள வங்கிகள் செயல்படுகின்ற நேரத்தில் விவசாயிகள் நல்ல முறையில் பயன்பெறுகின்ற முறையில் நிலவள வங்கிகள் அமைக்கப்படுமா, அதற்காக உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கி அமைப்பதிலே இந்திய ரிசர்வ் வங்கியின் சில வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகிறது. அந்த வகையிலே இந்த அரியலூர் வட்டத்திலும், ஆண்டிமடம், செந்துறை வட்டங்கள்,